www.Padasalai.Net

<u>ந.க.எண்.வநி.5(3)/ 01/1504 /2024</u>

வருவாய் நிர்வாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

<u>நாள்: 04.11.2024</u>

## <u>சுற்றறிக்கை</u>

பொருள்: சான்றுகள்– ஆதரவற்ற விதவை சான்றிதழ்– ஆதரவற்ற விதவை சான்று வழங்குவதில் உள்ள நிபந்தனைகளை தளர்த்த கோருதல்– அரசால் தெளிவுரை வழங்கப்பட்டது– தொடர்பாக

பார்வை– 1. அரசாணை (நிலை) எண் 225, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(எம்) துறை, நாள் 8.3.1984
2. அரசு கடித எண் 6269226/வநி3(2) /2023–1 நாள் 22.09.2024

*__*__*__*

பார்வை 2–ல் காணும் அரசு கடிதத்தில் திரு.எஸ்.வெங்கடேசன், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஆதரவற்ற விதவைகளுக்கு தமிழ்நாட்டில் கோட்டாட்சியர்/ சார் ஆட்சியர் நிலையில் ஆதரவற்ற விதவை சான்று வழங்கப்பட்டு வருகிறது என்றும், அச்சான்று வழங்குவதற்கு எவ்வித துணையுமில்லாமல் வசிக்க வேண்டும் என்பது போன்ற பொருத்தமில்லாத நிபந்தனைகளை தளர்வு செய்து, ஏழை எளியவர்களுக்கு எளிதாக சான்று கிடைத்திட வழிவகை செய்யுமாறு கோரியுள்ளார் என்பதன் அடிப்படையில் ஆதரவற்ற விதவை சான்று வழங்குவதற்கு அரசு பார்வை 2–ல் கண்ட அரசு கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

"இந்நேர்வு தொடர்பாக அரசாணை (நிலை) எண் 225, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 08.03.1984–ல், The expression "destitute widows" is defined as one who has neither any means by herself to live on nor any dependent to protect her from starvation என வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆதரவற்ற விதவை சான்று வழங்குவதற்கு எவ்வித துணையுமில்லாமல் வசிக்க வேண்டும் என்பதற்கு மகன் / மகள் ஆகியோர் துணையில்லாமல் இருக்க வேண்டும் என்பது பொருளல்ல என தெளிவுபடுத்தப்படுகிறது. மேலும், அவர்கள் இருந்தும் அவர்களால் ஆதரவற்ற விதவையின் வாழ்வாதாரத்திற்கு எந்தவித அனுகூலமும் கிடைக்காமல் ஆதரவற்ற நிலையில் இருப்பது என்றே பொருள்படும். எனவே, மேற்கண்ட அறிவுரைகளின்படி ஆதரவற்ற விதவை சான்று

www.Padasalai.Net

வழங்க சார்நிலை அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-ராஜேஷ் லக்கானி
கூடுதல் தலைமை செயலர் /
வருவாய் நிர்வாக ஆணையர்

<u>பெறுநர்</u>

அனைத்து மாவட்ட ஆட்சியர்,
அனைத்து மாவட்டம்.

<u>நகல்</u>

1. அரசு முதன்மைச் செயலர்,
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை,
வருவாய் நிர்வாக அலகு,
வநி3(2) பிரிவு, தலைமைச் செயலகம்,
சென்னை–9

2. திரு.எஸ்.வெங்கடேசன்,
நாடாளுமன்ற உறுப்பினர்,
மதுரை நாடாளுமன்ற தொகுதி,
508, விட்டர் பாறு பட்டேல் இல்லம்,
கான்ஸ்டிடியூஷனல் கிளப் ஆப் இந்தியா அருகில்,
ரஃபி மார்க், நியூ டெல்லி – 110 001.

உதவி ஆணையர் - 6
கூடுதல் தலைமை செயலர் /
வருவாய் நிர்வாக ஆணையருக்காக